**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, LALGUDI.**

**Calendar :**

**Miscellaneous :**

**Case No.CC. 51 of 2017**

**Preliminary Register :**

**Sessions :**

**Deposition of Witness for Prosecution PW1**

**Defence**

**Name :லீமா ஜோஸ்பின்**

**Father's/ Husband Name : வினோத்குமார்**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.08.2021.**

முதல் விசாரணை

நான் தற்போது இலால்குடி தாலுக்கா, கீழ்மாரிமங்களத்தில் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் 1வது எதிரி வினோத்குமார் எனது கணவர். 2ம் எதிரி என் மாமியார், 3வது எதிரி எனது நாத்தனார், 4வது எதிரி எனது நாத்தனாரின் கணவர். 12.11.2014 அன்று பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு எனக்கும், என் கணவருக்கும் திருமணம் நடந்தது. புரத்தாக்குடியில் உள்ள சவேரியார் திருமண மண்டபத்தில்

திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பின்னர் நானும், எனது கணவரும் பள்ளிவிடை எழில்நகரில் எனது மாமியாருடன் வசித்து வந்தோம். திருமணமானதலிலிருந்து எனது கணவர் என்னை சந்தோஷமாக வைத்துக்கொள்ளவில்லை. எனது கணவர் நான் என்ன செய்தாலும் எதாவது குறை கண்டுபிடித்து காரணம் இல்லாமல் என்னை அவமானபடுத்தினார். நீ உனது வீட்டிலிருந்து என்ன கொண்டு வந்தாய் என்றும், நீ என் மனைவியே இல்லை என்றும், உன்னை பேருக்கு தான் திருமணம் செய்துகொண்டேன் என்றும் கூறி, அவமானபடுத்தி வந்தார். அதன் பின்னர், எனது பெற்றோர் வீட்டிலிருந்து பணம், நகைகளை வாங்கிவா என்றும், வாங்கிவந்தால்தான் உன்னை வாழ வைப்பேன் என்றும் கொடுமைப்படுத்தினார். எனது மாமியார் என் கணவருடன் இவளை வீட்டை விட்டு விரட்டு என்று கேவலமாக பேசினார். எனது நாத்தனாரும் நான் அணிந்திருந்த நைட்டியை பிடித்து இழுத்து கிழித்து என்னை வீட்டை விட்டு வெளியே போ என்று அவமானப்படுத்தினார். என்னை எனது கணவர் வீட்டில் கொடுமைபடுத்தியதை பற்றி எனது அம்மாவிடமும், சித்தியிடமும் சொன்னபோது அவர்கள் என்னை கொஞ்சம் பொறுமையாக இரு என்று கூறினர். அதன் பின்னர், கொஞ்ச நாட்கள் எனது கணவர் வீட்டில் அமைதியாக இருந்தார்கள். அதன் பின்னர், மறுபடியும் கொடுமை செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அதனால் 16.04.2015 அன்று இலால்குடி மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். எனது புகாருக்கு மனு ரசீது எண்.65/15 வழங்கினார்கள். நான் அளித்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அங்கு எனது கணவர் மற்றும் மாமியார், நாத்தனார், நாத்தனாரின் கணவர் ஆகியோரை விசாரித்தபோது எதிரிகள் இனிமேல் அதுபோல் என்னை கொடுமைப்படுத்தமாட்டேன் என்று சொல்லி வீட்டிற்கு அழைத்துச்சென்றார்கள். அதன் பிறகு, கொஞ்ச நாட்கள் அமைதியாக இருந்தாகள். மறுபடியும் பத்து பவுன் நகையும், ரூ.50,000 பணமும் எனது பெற்றோரிடம் வாங்கி வருமாறு கூறி, என்னை கொடுமைப்படுத்த ஆரம்பித்தார்கள். அப்போது 4வது எதிரியான எனது நாத்தனாரின் கணவர் எனது கணவரிடம் இவளை காலி பண்ணு உனக்கு நான் வேறு கல்யாணம்

செய்து வைக்கிறேன் என்று திட்டினார். அதன் பிறகு எனது கணவர் என்னை கேவலமான வார்த்தைகளால் திட்டி அடித்து கொடுமைப்படுத்தினார். 17.05.2015 அன்று இலால்குடி மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். அங்கு விசாரித்தபோது, எதிரிகள் என்னை அழைத்துச்சென்று தனிகுடித்தனம் வைப்பதாக சொல்லிவிட்டு என்னை அழைத்துச்செல்லாமல் சென்றுவிட்டார்கள். 21.06.2015 அன்று மீண்டும் நான் இலால்குடி மகளிர் காவல் நிலையம் சென்று வாய்மொழியாக எதிரிகள் என்னை அழைத்துச்செல்லாதது பற்றி முறையீட்டேன். அப்போது எனது கணவர் என்னை குமுளூருக்கு வாழ அழைத்துச்செல்வதாக கூறினார். எனது பெற்றோர் எனது கணவரிடம் முதலில் வீடு பார்த்துவிட்டு ஒரு வாரம் கழித்து அழைத்துச்செல்லுமாறு கூறினார். ஆனால், அதன்பிறகு என்னை குமுளூருக்கு அழைத்துச்செல்லவில்லை. அதனால் 20.11.2015 அன்று மகாலிங்கம், பாப்புராஜ், அந்தோணிகுரூஸ், பிரேம்குமார் ஆகிய எனது ஊர்காரர்களை குமுளூருக்கு அழைத்துச்சென்று எனது கணவரின் உறவினர்களிடம் சொல்லி எனது கணவர் என்னோடு சேர்ந்து வாழ அறிவுறுத்துமாறு பேசினோம். அப்போது என் கணவர் என்னோடு சேர்ந்து வாழ முடியாது என்று கூறிவிட்டார். திருமணத்தின்போது, எனது பெற்றோர்கள் எனக்கு சீதனமாக கொடுத்த மரக்கட்டில், பீரோ, மெத்தை மற்றும் வீட்டுக்கு தேவையான ஒரு லட்சம் மதிப்புள்ள பொருட்கள் மற்றும் 8 பவுன் நகைகளும் எனது கணவர் வீட்டில் உள்ளது. அதன்பிறகு, எனது கணவருடன் சேர்ந்து வாழ ஆசைப்பட்டும் அவர் என்னோடு வாழாததால் எனது கணவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரணை செய்தார்கள்.

**கு.வி.(எதிரி தரப்பில்)**

(எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராயிருந்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.)